Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.192/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW8** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மாயாராஜலெட்சுமி |
| Father Name | : | காசி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2025

(எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது தேனி மாவட்டம் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2019 ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில மண்டபம் சுடுகாடு அருகில் உள்ள அய்யனார் கோவில் அருகே போலிஸ் பார்ட்டியுடன் ரோந்து சென்றபோது இவ்வழக்கின் எதிரி முரளிதரன் என்கிற அருண் என்பவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் மற்றும் முகவரி முரளிதரன் த/பெ.சித்திரகுமார், 23, அவிநாசி, இலங்கை அகதிகள் முகாம், திருப்பூர் என கூறினார். மேலும் அவரை விசாரித்தபோது கருப்பு நிற பாலிதீன் கவரில் இந்திய கள்ளநோட்டுக்கள் வைத்திருப்பது தெரியவந்தது. எந்தவித

அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் எதிரி வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சார்பு ஆய்வாளர் சிராஜீதீன், காவலர் 1778 மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் அவர் தானாக முன்வந்து கொடுத்த கள்ளநோட்டுக்களை அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய கள்ளநோட்டுக்கள் ரூ.500 மதிப்பில் 201 நோட்டுக்கள். மொத்தம் மதிப்பு ரூ.1,00,500/-. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.8**. பின்னர் அவரை கைது செய்து சொத்துக்களுடன் காவல் நிலையம் கொண்டு வந்து மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.187/2019 இதச பிரிவுகள் 489 (A), 489(B) மற்றும் 489(C) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9**. பின்பு சாட்சிகளான சார்பு ஆய்வாளர் சிராஜீதீன், காவலர்கள் அன்பு செல்வம், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனி வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 2ம் எதிரி முரளிதரன் என்கிற அருண் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 14.11.2019ம் தேதி 23.00 மணிக்கு 1ம் எதிரி அகமது கபீர் என்கிற சாஜி த/பெ.அபுபக்கர் என்பவரை திருப்பூர், கணக்கன்பாளையம் சந்திப்பு, PN ரோடு என்ற முகவரியில் வாடகை வீட்டில் தங்கியிருந்த 2ம் எதிரியை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் காவலர்கள் கமலக்கண்ணன், ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 1ம் எதிரி தானாக முன்வந்து கள்ள நோட்டுக்கள் அடிக்க பயன்படுத்திய HP Inject Printer மெசினை ஆஜர் செய்தார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த பிரிண்டர் **அ.சா.பொ.1**. அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2. பின்பு 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை (TN 39 CX 1311) 15.00 மணிக்கு அவினாசி சாய்ராம் பார்க்கிங் ஸ்டாண்டில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அங்கு இருந்த சாட்சிகளான செல்வநாயகி என்கிற தேவி, தினேஷ் மற்றும் அன்பு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 1ம் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மேற்படி கைப்பற்றப்பட்ட

கள்ள நோட்டுக்களை நீதிமன்றம் மூலமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுகோள் கொடுத்து சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 489 (A), 489(B) மற்றும் 489(C) என்பதை 489 (A), 489(B), 489(C) மற்றும் 489(D) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.10**. பின்னர் பணிமாறுதல் காரணமாக வழக்குக்கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நான் எங்கு இருக்கும்போது இரகசிய தகவல் கிடைத்தது என்றால் ரோந்து அலுவலில் இருந்தபோது. இரகசிய தகவல் கிடைத்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 10.30 மணி. எனக்கு மண்டபம் பகுதியில் கள்ள நோட்டு புழக்கம் இருப்பதாகத்தான் இரகசிய தகவல் கிடைத்தது என்றால் சரிதான். மண்டபம் பகுதி என்பது சுமார் 5 கிமீ சுற்றுளவு கொண்ட மக்கள் அதிகமாக நடமாட்டம் உள்ள பகுதி என்றும், அந்த பகுதியை ரோந்து சுற்றிவர 2 மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். மண்டபம் சுடுகாடு பகுதி என்பது காவல் நிலையத்திற்கு நேர் எதிரே உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் டாஸ்மாக் கடையும், அய்யனார் கோவிலும் உள்ளது என்றும் எப்போதும மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். நான் சுடுகாடு பகுதிக்கு சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் காலை 11.00 மணி. நான் 2ம் எதிரியை எவ்வாறு அடையாளம் கண்டு கொண்டேன் என்றால் அவர் எங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார். நாங்கள் எந்த வாகனத்தில், யார்யார் ரோந்து சென்றோம் என்றால் சார்பு ஆய்வாளர் சிராஜீதின், காவலர்கள் மணிகண்டன், அன்பு செல்வம் ஆகியோர்கள் எனது ஜீப்பில் சென்றோம். 2ம் எதிரியை கைது செய்யும் போது அய்யனார்கோவில் அருகே இருந்த மக்கள், டாஸ்மாக் அருகே இருந்த மக்கள் கூடிவிட்டனர் என்றால் சரிதான். 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலோ அல்லது 2ம் எதிரி வசம் இருந்ததாக சொல்லப்படும் கள்ள நோட்டுக்களை கைப்பற்றும்போது தயார் செய்யப்பட்ட அத்தாட்சியிலோ அங்கிருந்த பொதுமக்களிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் யாரும் முன்வரவில்லை. ஒப்புதல் வாக்குமூலம்

யார் தயார் செய்தது என்றால் நான்தான். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலத்தை எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தோம் என்றால் காவல் நிலையத்தில். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தோம் என்றும் அதனால்தான் பொதுமக்கள் யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. டாஸ்மாக் கடை மற்றும் அய்யனார்கோவிலில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியிருந்த பதிவுகளை கைப்பற்றினேனா என்றால் இல்லை. 1ம் எதிரியை கைது செய்ய யார்யார் எந்த வாகனத்தில், எந்த தேதியில் சென்றோம் என்றால் என்னுடைய வாகனத்தில் சார்பு ஆய்வாளர் சிராஜீதின், காவலர்கள் மணிகண்டன், ஜெயக்குமார், கமலக்கண்ணன் ஆகியோர்களுடன் சென்றோம். 1ம் எதிரியின் வீட்டை அடையாளம் காட்டியது யார் என்றால் அங்குள்ளவர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டோம். 1ம் எதிரி குடியிருந்த வீடு என்ன வகையான வீடு என்றால் சென்ட்ரிங் வீடு. 1ம் எதிரியின் குடியிருந்த வீடு சென்ட்ரிங் வீடு அல்ல என்றும் ஆஸ்பட்டாஸ் கூரை போட்ட வீடு என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் நான் 1ம் எதிரியை கைது செய்ய செல்லவில்லை என்றும், எனது அறிவுரையின் பேரில் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் கைது செய்து வந்தனர் என்றும், அதனால்தான் 1ம் எதிரியின் வீடு சென்ட்ரிங் வீடா அல்லது ஆஸ்பட்டாஸ் வீடா என்று சொல்வதில் தடுமாற்றம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரிண்டரை அங்கு வைத்து சோதனை செய்துதான் கொண்டு வந்தேன் என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து சோதனை செய்தேனா என்றால் இல்லை. பிரிண்டிங் மிஷின் இயங்கும்நிலையில்தான் இருந்தது என்றால் 1ம் எதிரி இயங்கும் நிலையில் உள்ளதாக சொன்னார், நான் பரிசோதிக்கவில்லை. பிரிண்டிங் மிஷினில் எந்தவித சேதாரமும் இன்றி நல்லநிலையில்தான் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிரியிடமிருந்து எந்த கள்ளநோட்டுக்களும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலோ, அதன் அடிப்படையில் பிரிண்டர் கைப்பற்றப்பட்டபோது தயாரிக்கப்பட்ட அத்தாட்சியிலோ அங்குள்ள

பொதுமக்களிடம் சாட்சியாக கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான், யாரும் முன்வரவில்லை. ஒப்புதல் வாக்குமூலமும், அத்தாட்சியும் காவல் நிலையத்தில வைத்து பின்னிட்டு தயார் செய்து கொண்டதால்தான் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் இருந்த பொதுமக்கள் யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி குடியிருந்த வீட்டிற்கு அருகில் வசித்த வனிதா, அழகுராஜா, செல்லம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோது சொன்ன தேதியில், நேரத்தில் 1ம் எதிரியை தேடி செல்லவில்லை என்றும், 1ம் எதிரியிடம் இருந்து எந்தவித பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றும், முறையாக புலன்விசாரணை செய்யாமல் பிரிண்டிங் மிஷினை வெளிமார்க்கெட்டில் வாங்கி 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக ஆவணங்களை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி 1ம் எதிரியிடமிருந்துதான் கள்ள நோட்டுக்களை வாங்கியதாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

முதல் தகவல் அறிக்கையை நானாக தயார் செய்யவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த இரண்டு நாட்களுக்கு முன்பு மண்டபம் வந்திருந்த 2ம் எதிரியை இராமநாதபுரம் கியூ பிராஞ்ச் போலிசார் விசாரித்து அவர்கள் கஸ்டடியில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தகவல் கிடைத்த நேரம் 12.11.2019ம் தேதி காலை 10.30 மணி. தகவல் கிடைத்து 2ம்எதிரியை நான் விசாரித்த நேரம் 11.00 மணி. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் இராமநாதபுரம் கியூ பிராஞ்ச் போலிசார் சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்த நேரம் 14.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது மதியம் 02.00 மணியைக்குறிக்கும் என்றும், நான் சொன்னதுபோல் 10.30 என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின் படி இதச பிரிவு 489(A) பொருந்தாது என்றால் சரியல்ல. மண்டபம் காவல் நிலையத்தை பொறுத்தவரை நான்தான் உயர்அதிகாரி என்றும் என்னுடன் ரோந்துக்கு வந்த காவலர்கள்

அனைவரும் எனக்கு கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டில் அன்றாடம் செய்யும் நடவடிக்கைகளை குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். பொது நாட்குறிப்பேட்டில் 2ம்எதிரியை பொறுத்து எந்தவித குறிப்பும் செய்யவில்லை என்பதால்தான் முதல் தகவல் அறிக்கையில் அதுபற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2ம்எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ள நோட்டுக்களின் விவரங்கள் பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு தனியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்ட பிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். 2ம்எதிரியை கைது செய்ததாக சொலலப்படும் இடத்திற்கு அவர் வரவில்லை என்றும், நானும் அங்கு சென்று 2ம் எதிரியை கைது செய்யவில்லை, ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் 2ம் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தபோது கைது குறிப்பாணையோ, கைது அட்டையோ வைக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியை நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தபோது என்னென்ன ஆவணங்கள் சமர்பித்தேன் என்றால் ஞாபகமில்லை. 13.11.2019 அன்றுதான் 2ம் எதிரியை நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாக உள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியபோது 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளநோட்டுக்கள், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலத்தை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ள நோட்டுக்களை, கைப்பற்றுதல் மகசருடன் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 3 முறை கைப்பற்றுதல் மகசரை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தபோது அந்த மகசர் கள்ளநோட்டுக்களை ஒப்படைக்க சொல்லி திருப்பப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. 03.09.2020 அன்றுதான் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் கள்ளநோட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளநோட்டுக்கள் அவரிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதற்கு எந்தவிதமான குறிப்பான

அடையாளங்களும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பிரிண்டர் கலர் பிரிண்டரா அல்லது வெள்ளை கருப்பு நிற பிரிண்டரா என வகைப்படுத்தி சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்த கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஸ்கேனர் பிரிண்டர் என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஸ்கேனர் பிரிண்டர் பழுதடைந்த எதற்கும் உதவாக ஒன்று என்றும், அதை வழக்கிற்காக கைப்பற்றியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஸ்கேனர் பிரிண்டில் எந்த நோட்டுக்களும் அச்சடிக்க முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது முதல் 100 சதவீத புலன் விசாரணையை நான்தான் மேற்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்குக்கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். கள்ள நோட்டுக்கள் மற்றும் பிரிண்டரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு யார் அனுப்பியது என்றால் நான்தான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் கள்ளநோட்டுக்களை கைப்பற்றிய இடத்தில் வைத்து யார் முன்னிலையில் கைப்பற்றினேனோ அந்த சாட்சிகளின் கையெழுத்துக்களை பெற்று கள்ள நோட்டுக்களுடன் வைத்து மூடி முத்திரையிடப்பட்ட பார்சலில் நீதிமன்றத்தில் அனுப்பி வைத்திருந்தால் மட்டுமே நான் கைப்பற்றியதாக எடுத்துக்கொள்ள முடியும் என்றால் சரியல்ல. நான் அந்த நடைமுறையை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர், மாதிரி வரைபடத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எனது காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றியதாக தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய நோட்டுக்கள் கள்ள நோட்டுக்கள் என் உறுதி செய்ய தடய அறிவியல் நிபுணர்களால் முடியாது என்றும் ரிசர்வ் வங்கி அலுவலர்கள் மற்றும் இந்திய பணம் அச்சடிக்கும் நாசியில் உள்ள நிறுவனத்தாரால் தான் உறுதி செய்ய முடியும் என்றால் சரியல்ல. கோவை அவினாசி, சாய்ராம் வாகனங்கள் நிறுத்துமஇடத்தில் வைத்து நான் கைப்பற்றியதாக சொல்லும் 2ம்எதிரிக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளை அங்கு வைத்து கைப்பற்றவில்லை என்றும் இராமநாதபுரத்திற்கு 2ம் எதிரியை வரவழைத்து

காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் 2ம் எதிரியை போலிஸ் காவலில் எடுத்துத்தான் அவரது வாகனத்தை கைப்பற்றியிருக்க வேண்டும் என்றும், அவர்தான் அவரது வாகனத்தை அடையாளம் காட்ட முடியும் என்றும், நானாக கைப்பற்றியது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்து தன்னிச்சையாக எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வில்லை என்றும் என்னுடைய கட்டாயத்தின் பேரிலும், வற்புறுத்தலின் பேரிலும் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. கள்ள நோட்டு வழக்குகளை தேசிய புலனாய்வு குழுதான் விசாரிக்க வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கு போலிசார் விசாரிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் கள்ள நோட்டு வழக்கை முழுவதுமாக விசாரிக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடன் உயர்அதிகாரிகள் மூலமாக மாநில உள்துறைக்கு அனுப்பியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மாநில உள்துறை மூலமாக மத்திய அரசாங்கள் அனுமதி அளித்தால் மட்டுமே வழக்கு புலன் விசாரணையை நான் தொடர்ந்து மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் உண்டு என்றால் சரியல்ல. தேசிய புலனாய்வு முகமை சட்டம் 2008ல் சொல்லப்பட்டுள்ளபடிதான் நான் விசாரணையை செய்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்ய தவறியதால் என்னுடைய விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தேசிய புலனாய்வு முகமை சட்டம் 2008ல் சொல்லப்பட்டுள்ளபடி மத்திய அரசாங்கத்திடமிருந்து இசைவானை பெற்ற பிறகுதான் நீதிமன்றத்தில் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும கள்ள நோட்டுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரியை இவ்வழக்கில் சேர்த்த பிறகுதான் 2ம் எதிரிக்கு 1ம் எதிரியை தெரியும் என்றும், அதற்கு முன்பு 2ம் எதிரிக்கு 1ம் எதிரியை யார் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.